


# பல்சுவைப் பாடல்கள்



## அ. குறுந்தொகை

மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பம் !

மாலை முன்றிற் குறுங்காற் கட்டில்
மனையோள் துணைவி யாகப், புதல்வன்
மார்பின் ஊரும் மகிழ்நகை இன்பப்
பொழுதிற்கு ஒத்தன்று மன்னே,
மென்பிணித் தம்ம பாணன் தியாழே.

தெளிவுரை : மாலைப்பொழுதிலே, தன் வீட்டின் முற்றத்திலே, குறுகிய கால்களையுடைய கட்டிலிலே, மனையாள் தான் அமர்ந்திருக்கப் படுத்திருக்கும் தலைவனின் மார்பிடத்தே, அவர்கள் புதல்வன் ஊர்ந்து களித்து விளையாடி இருக்கின்றான். அதனிலே மகிழ்ந்து, அவர்கள் கொண்ட நகையொலியானது, அவ்வேளை பாணனது யாழிலேயிருந்தும் எழுகின்ற முல்லைப்பண்ணின் இன்னிசைக்கு ஒத்ததான மென்பிணிப்பான இன்பக்கிளர்ச்சியைத் தருவதாயிருந்தது.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| குறுங்கால் கட்டில் | - | குறுகிய கால்களையுடைய கட்டில். |
| மாலை | - | மாலைநேரம் |
| மனையோள் | - | மனையாட்டி |
| மார்பின் | - | மார்பினிடத்தே |
| மகிழ்நகை | - | மகிழ்ச்சியாலே செய்யும் நகையொலி |
| மென்பிணி | - | மென்பிணிப்பை உடையதானது. |

### பயிற்சி

1. இச்செய்யுளில் புலவர் கையாண்ட பாத்திரங்களின் மனநிலை பற்றி என்ன கருதுகிறீர்கள் ?
2. பெற்றோரின் சிரிப்பொலியைக் கவிஞர் எதற்கு ஒப்பிடுகிறார் ?
3. இச்செய்யுள் நினைவுபடுத்தும் குறளொன்றை எழுதுங்கள்.

## ஆ. புறநானூறு

'பாரி பாரி' என்று பல ஏத்தி,
ஒருவற் புகழ்வர், செந் நாப் புலவர்;
பாரி ஒருவனும் அல்லன்;
மாரியும் உண்டு, ஈண்டு உலகு புரப்பதுவே.

தெளிவுரை : செந்நாப் புலவர், பாரி பாரி என்று சொல்லி அவன் பல புகழையும் வாழ்த்தி அவ்வொருவனையே புகழ்கின்றனர். பாரி ஒருவன் மட்டுமல்லன்; இவ்விடத்து உலகைப் பாதுகாப்பதற்கு மழையும் (மாரி) உண்டு.

### அருஞ்சொற்பொருள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஏத்தி | - | வாழ்த்தி | மாரி | - | மழை |
| உலகு | - | உலகம் | புரப்பது | - | பாதுகாப்பது. |

### பயிற்சி

1. மன்னனின் புகழை வெளிப்படுத்த புலவர் கையாண்ட உத்தி யாது ?
2. பாரியின் கொடைப்பெருமை எவ்வாறு புலப்படுத்தப்படுகிறது ?

## இ. நற்றிணை

புறந்தாழ்வு இருண்ட கூந்தற் போதின்
நிறம் பெறும் ஈரிதழ் பொலிந்த உன்கண்
உள்ளம் பிணிக் கொண்டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்க்கஞ் செல்வாம் என்னுஞ்
செய்வினை முடியாது எவ்வஞ் செய்தல்
எய்யாமையோடு இளிவுதலைத் தருமென
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிது ஒளி விரையல் என்னும் ஆயிடை
ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்என வருந்திய வுடம்பே,

தெளிவுரை :என் தலைவி பின்புறம் தாழ்ந்து கிடக்கின்ற கரிய கூந்தலை உடையவள். அவள் கண்கள் நெய்தல் மலர் போன்றவை. நிறம் விளங்கிய ஈரமுடைய இமைகளை உடையவை. மை தீட்டப் பெற்ற அந்தக் கண்கள் என் உள்ளத்தையே கௌவிப்பிணிக்கும் இயல்பு படைத்தவை. அத்தகைய தலைவியிடம் பிரிவுத்துன்பம் தீர்க்கச் செல்வோம் என்று என் நெஞ்சம் என்னை அவள்பால் இழுக்கிறது. ஆனால் மறுபுறம் எடுத்த செயலை முடிக்காமல் அதனை வெறுத்து ஒதுக்கிவிட்டுத் தலைவியிடம் சென்றால் அது அறியாமையாகும். உன் ஆண்மைக்கு இழிவு தரும் என்று என்னுடைய அறிவு என்னைத் தலைவி பால் செல்லவிடாமல் செய்ய வேண்டிய கடமை நோக்கி இழுக்கிறது. இதற்கிடையே என் உடல் கிடந்து தவிக்கிறது. விளங்கிய தலையோடு கொம்பினையுடைய இரண்டு யானைகள் எதிர் எதிராக நின்று கைப்பற்றி ஈர்த்த தோய்ந்த புரியையுடைய பழைய கயிறு இற்றுப் போவதுபோல என் உடல் இற்றுப் போக வேண்டியது தானோ.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| புறந்தாழ்வு | - | பின்புறத்தில் தாழ்ந்த |
| ஈரிதழ் | - | ஈரம் பொருந்திய இமை |
| எவ்வம் | - | வெறுத்தல் |
| தூக்கி | - | அசைக்க |
| ஒளிறு | - | தலை |
| களிறு | - | யானை |
| கொல் | - | அசை |
| போது | - | மலர் |
| செல்லல் | - | துன்பம் |
| எய்யாமை | - | அறியாமை |
| தூங்கி | - | அசைந்து |
| மருப்பு | - | கொம்பு |
| வீவது | - | அழிவது |

### பயிற்சி

1. இப்பாடலைப் பாடிய புலவர் யார்?
2. தலைவியைப் பற்றி புலவர் எவ்வாறு வருணிக்கிறார்?
3. தலைவனுடைய மனதுக்கும், அறிவுக்குமிடையே நடைபெறுகின்ற போராட்டத்தை விளக்குங்கள்.
4. ''ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
   தேய்புரிப் பழங்கயிறு போல
   வீவது கொல் என் வருந்திய உடம்பே''
   என்ற தொடரில் கையாளப்பட்டிருக்கும் உவமை அணியை நயந்துரையுங்கள்.

## ஈ. ஐந்திணை ஐம்பது

உண்கண் சிவப்ப அழுதேன்

கொண்கண் பிரிந்த குளிர்பூம் பொழில் நோக்கி
உண் கண்சிவப்ப அழுதேன்; ஒளிமுகம்
கண்டு அன்னை எவ்வம் யாது என்னக், கடல்வந்து என்
வண்டல் சிதைந்தது என்றென்.

தெளிவுரை :கணவன் பிரிந்து சென்ற குளிர்ந்த மலர்ச் சோலையைப் பார்த்து அழுதேன். அதனால் என் கண்கள் சிவந்து விட்டன. அப்பொழுது என் தாய் வந்தாள். எனது முகத்தைப் பார்த்தாள். ஒளியுடன் இருந்த என் முகம் வாடியிருப்பதைக் கண்டாள். உடனே உனக்குண்டான துன்பம் யாது? ஏன் அழுகிறாய்? என்றாள். கடல் அலை வந்து விளையாட்டு மணல் வீட்டைக் கலைத்துவிட்டது என்றேன்.

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| கொண்கண் | - | நெய்தல் நிலத்தலைவன் |
| எவ்வம் | - | துன்பம் |
| ஒளிமுகம் | - | உவமைத்தொகை |
| பூம்பொழில் | - | மலர்ச்சோலை |
| வண்டல் | - | மணல்வீடு |

### பயிற்சி

1. இப்பாடலில் கணவனைப் பிரிந்த தலைவியின் துயரம் எவ்வாறு காட்டப்பட்டுள்ளது?
2. தலைவி கூறிய பதிலில் வெளிப்படும் உட்பொருள் யாது?

# உ. சிறு பஞ்சமூலம்

## எது வனப்பு

கண்வனப்புக் கண்ணோட்டம்: கால்வனப்புச் செல்லாமை
எண்வனப்பு இத்துணையாம் என்றுரைத்தல் - பண்வனப்புக்
கேட்டார் நன்றுஎன்றல்; கிளர்வேந்தன் தன்நாடு
வாட்டான் நன்றுஎன்றல் வனப்பு.

தெளிவுரை : கண்ணுக்கு அழகு அதை அழகுபடுத்துவதல்ல, துன்பப்படுபவர்க்கு இரக்கம் காட்டுதலாகும். மதியாதார் தலைவாசலை மிதியாமையே காலுக்கு அழகு, இத்துணை என்று கணக்கிட்டுக் கூறுதலே கணக்குக்கு அழகு, கேட்பவர் நன்று நன்று என்னும்படியாகப் பாடுவதே பாட்டுக்கு அழகாகும். அரசனுக்கு அழகு தனது நாட்டு மக்களைத் துன்புறுத்த மாட்டான் என்று சொல்லப்படுவதாகும்.

### அருஞ்சொற்பதங்கள்

| | |
|---|---|
| வனப்பு | - அழகு |
| கண்ணோட்டம் | - இரக்கம் காட்டல் |
| எண் | - கணக்கு |
| பண் | - பாட்டு |
| வாட்டான் | - துன்புறுத்தமாட்டான் |

### பயிற்சி

1. கண்,கால் எனும் உறுப்புக்களுக்கு அழகு தருவது எது?
2. எண்ணுக்கும் பண்ணுக்கும் அழகு யாது?

# ஊ. ஏலாதி

## உயிர் அறுதொழில்

எடுத்தல், முடக்கல், நிமிர்த்தல், நிலையே, படுத்தலோடு, ஆடல்,
பகரின் - அடுத்துஉயிர்
ஆறுதொழில் என்று அறைந்தார் உயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து.

தெளிவுரை : கையை ஊன்றி உடம்பை மேலே தூக்குவதாகிய தண்டால், கைகால்களை முடக்கியிருத்தலாகிய ஆசனம், நிமிர்ந்து நிற்றல், தலைகீழாக நிற்றல், படுத்துச்செய்யும் பயிற்சி, குதித்தல், இவைகள் உடற்பயிற்சிகளாகும். இவைகளின் சிறப்பைக் கூறவேண்டுமானால், பெரியோர்கள் உடம்பில் உயிர் அமைதியோடு வாழ்வதற்கான தொழில்கள் என்று இவைகளையே வேறு வேறு தொழில்களாக தனித்தனியே கூறினார்கள்.

### அரும்பதச்சொற்கள்

| | | |
|---|---|---|
| எடுத்தல் | - | உடம்பை மேலே தூக்குதல் |
| முடக்கல் | - | ஆசனம் |
| நிலையேபடுத்தல் | - | படுத்துச் செய்யும் ஆசனம் |

### பயிற்சி

1. உடம்பில் உயிர் அமைதியோடு வாழ்வதற்கான தொழில்கள் யாவை?
2. இங்கு கூறப்படும் உடற்பயிற்சிகளைக் குறிப்பிடுக.

## எ.திருப்பாவை

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய
தூபங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள் திறவாய்
மாமீர்! அவளை யெழுப்பீரோ உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.

(ஆண்டாள்

தெளிவுரை : குற்றமற்ற மணிகள் அழுத்திக் கட்டப்பட்ட மாளிகையில் நாட்புறத்தும் விளக்குகள் எரியவும், நறுமணப் புகை எங்கும் மணக்கவும், அன்னத் தூ வியாற் செய்த மென்மையான படுக்கையின் மேல் கண்ணுறங்குகின்ற அம்மான் பெண்ணே, மாணிக்கக் கதவினுடைய தாழ்ப்பாளைத் திறப்பாயாக. மாமியரே, உள்ளே உறங்குகின்ற உம்மகளை எழுப்பமாட்டீரோ? உம்முடைய மகள்தான் வாய்ப்புலன் இல்லாதவளோ, செவிப்புலன் அற்றவளோ? பேருறக்கம் உடையவளோ? எழுந்திராவண்ணம் காவலிடப்பட்டாளோ? நெடும் போது உறங்கும்படி மந்திரத்தால் கட்டப்பட்டாளோ? அளவிட்டுச் சொல்லக்கூடாத வியத்தகு குணங்களையும் செயல்களையும் உடையவனே, திருமகள் கேள்வனே, ஸ்ரீவைகுண்ட நாதனே, என்று இவ்வாறாக எம்பெருமானுடைய ஆயிரக்கணக்கான திருநாமங்களையும் வாயாரச் சொல்லினோம்' (இனியேனும் உம் மகனை எழுப்பலாகாதோ)

### அரும்பதங்கள்

| | | |
|---|---|---|
| தூமணி | - | தூய்மையான மணி |
| அனந்தல் | - | பேருறக்கம் |
| ஏமப்பெருந்துயில் | - | பேருறக்கம் |
| துயிலணை | - | படுக்கை |

### பயிற்சி

1. எவ்வாறான படுக்கையின் மேல் கண்ணுறங்குவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
2. ‘திருமகள் கேள்வன்’ எனக் குறிப்பிடப்படுபவர் யார்?


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

## ஏ. தேம்பாவணி

எருசலேம் பெருமை

மெய் வழி மறை நூல் நீங்கி, வியன் உலகு இனிது என்று, இன்னா
அவ்வழி உற்றது என்ன, வதிந்து எமை அளித்துக் காக்கச்
செவ்வழி உளத்த தூயோன் தெரிந்த மா நகர் இது என்றால்,
இவ்வழி பின்னர் உண்டோ எருசலேம் நகரை வாழ்த்த?

(வீரமாமுனிவர்

தெளிவுரை : பரந்த இவ்வுலக வாழ்க்கையே இனிதென்று மதித்து, வேத நூல் காட்டிய உண்மையான வழியை விட்டுவிலகியதனால், பாவமாகிய துன்பத்தினால் கவரப்பட்டு இவ்வுலகம் அழிவுக்கு ஆளாகியதென்று கண்டு, செம்மையான வழியிலேயே செல்லும் உள்ளத்தைக் கொண்ட தூயவனாகிய ஆண்டவன் தானே இவ்வுலகிற்கு வந்து தங்கியிருந்து நம்மையெல்லாம் மீட்டுக் காக்கவென்று தெரிந்து கொண்ட பெரிய நகரம் இது என்றால், எருசலேம் நகரை வாழ்த்த இந்த முறைமைக்குப் பின்னரும் சிறந்த வேறொன்று உண்டோ?

### அரும்பதங்கள்

மெய்வழி - உண்மையான வழி

வியன் உலகு - பெரிய உலகம்

### பயிற்சி

1. தேம்பாவணி என்ற காப்பியம் எதைப்பற்றிப் பாடுகிறது ?
2. எருசலேம் நகரத்தின் சிறப்பு யாது ?

## ஐ. முகியத்தீன் புராணம்

இல்மெனுங் கடலை மனமுகில் தேக்கி
இயலறி வமுதெனப் பொழிய
வல்வினை யகல மனுப்பயிர் தழைக்க
மருவிய வுலகெலாம் பயிலக்
கொல்வினை பொருந்துங் குபிர்க்குல மறுத்த
குருநபி மறையினைப் பெருக்கி
நல்வினை பயிற்று நாலிமாம் களையும்
நாவினா லனுதினம் புகழ்வாம்.

தெளிவுரை : கொல்வதே தொழிலாகக் கொண்ட கொடியவர்களாக வாழ்ந்த மாந்தருக்கு நல்வழி காட்டியதும் நன்மையே செய்து நலம்பெற வாழ்வீரெனப் போதனை புரியும் பண்புள்ளதுமாகும் நபிகள் நாதரது புனித போதனையான இஸ்லாம். அந்த நற்போதனைகளை உணர்ந்து நடக்கும்படி மக்களுக்குப் போதித்தவர்கள் நான்கு இமாம்களுமாவர். அவர்கள் அறிவென்னுங் கடல்நீரை, மனமெனும் மாமுகிலிலே தேக்கி, மனிதர்களாகிய பயிர்கள் செழித்து வளருமாறு அறிவென்னும் மழையையும் பொழிந்தார்கள். அதனால், மனுக்குலம் அளப்பரும் நன்மையை அடைந்தது. அத்தகைய நன்மை செய்த நாலிமாம்களையும் நாவாரப் போற்றுவோம்.

-யாழ்பாணம் பதுருதீன் புலவர்-

பயிற்சி

1. இங்கு கூறப்பட்ட உருவகங்கள் எவை?
2. நாலிமாம்கள் செய்த நன்மை என்ன?

## ஆக்கத்திறன்

# விரித்தெழுதல்

ஒரு பொருளை அல்லது விளக்கக் குறிப்பொன்றைப் பலரும் விளங்கிக்கொள்ளும் வண்ணம் பொருள் புலப்பட விளக்கி விரித்து எழுதுதலை ‘விரித்தெழுதல்’ என்பர்.

நூல்கள், சொற்பொழிவுகள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், பத்திரிகைச் செய்திகள் முதலியனவற்றில் இருந்து குறிப்பெடுத்தல் சந்தர்ப்பங்கள் பல உங்களுக்கு ஏற்பட்டி ருக்கும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் நீங்கள் எடுத்த குறிப்புகளை விரித்துப் பொருள் புலப்பட எழுதவோ கூறவோ சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கும். எனினும், குறிப்புகளை விரித்து எழுதும் போதும் கூறும்போதும் சில நிபந்தனைகளையும் நுண்முறைகளையும் நீங்கள் அவதானிக்க வேண்டும்.

1. உசாத்துணை நூற்குறிப்பொன்றை நீங்கள் விளக்குவதானால், அந்நூலிற் குறிப்பிட்டுள்ள கருத்துக்களுக்கு மேலதிகமாக, அல்லது திரிபுபட்ட வகையில் நீங்கள் எழுதுதலாகாது. உங்கள் கருத்துக்களை அவற்றின் மீது இணைக்கவும் கூடாது.

அத்துடன், குறிக்கோள் கருதியே நீங்கள் குறிப்புகளை எடுக்கின்றீர்கள். எனவே, அக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கேதுவாக உங்கள் விளக்கம் அமைதல் வேண்டும். இவ்வாறான வரையறைகளுக்குள் நீங்கள் விரித்து எழுத வேண்டுமெனில் பின்வரும் ஆற்றல்களை நீங்கள் வளர்க்க வேண்டும்.

1. தெளிவான சிந்தனை
2. ஐயத்திரிபற்ற விளக்கம்
3. உறுதியான ஞாபகசக்தி
4. தொடர்புபடுத்துமாற்றல்
5. சிறந்த மொழிவளம்
6. பரந்த விடயஞானம்

ஒரு கருத்தின் பல்வேறு அம்சங்களை உள்ளடக்கியே ஒரு குறிப்பை ஒரு சொல்லில் அல்லது சொற்றொடர்களில் எழுதுகின்றோம். அதனை விளங்கிக் கூறுவதற்கு மேற்குறித்த ஆற்றல்களில் இயைபு எமக்கு அவசியமே.

### விரித்துக் கூறும் சந்தர்ப்பங்கள்

1. உசாத்துணை நூல்களிலிருந்து எடுத்த குறிப்புகளை எமது பல்வேறு தேவை. களுக்கு பயன்படுத்தும் போது.
2. அறிக்கைபடுத்தும் போது.
3. கட்டுரையாக்கத்திற்குப் பயன்படுத்தும்போது.
4. மேடைப் பேச்சுக்கு.
5. செய்யுள் ஒன்றின் பொருளை ஆய்ந்து எழுதும் போது.
6. சுருக்கம் எழுதுதல் ஒரு மொழியாற்றல் எனத் தரம் 10ல் கற்றோம். அவ்வாறே பொருள் புலப்படச் செம்மையான மொழியில், கவர்ச்சியான நடையில் விரித்து விளக்கி எழுதுவதும் ஒரு கலையே.

விரித்தெழுதல் மாதிரி

## மக்கட் செல்வத்தின் சிறப்பு

பொறை யிலா அறிவு; போகப்
புணர் விலா இளமை; மேவத்
துறையிலா வனச வாவி;
துகில் இலாக் கோலத் தூய்மை;
நறையிலா மாலை; கல்வி
நலமிலாப் புலமை; நன்னீர்ச்
சிறையிலா நகரம் போலும்
சேயிலாச் செல்வம் அன்றே

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியில் மக்கட் செல்வத்தின் சிறப்பினையே மேலுள்ள பாடல் மிக அழகாக உதாரணங்களுடன் எடுத்து விளக்குகின்றது. இப்பாடலின் பொருள் நயத்தற்குரியது. இப்பாடலின் மூலம் ஒவ்வொன்றுக்கும் அமைய வேண்டிய சிறப்பினை எதிர்மறையாகப் புலப்படுத்தும் வகையில் ஒருவனுக்கு அமைகின்ற மிக மேலான செல்வம் மகப்பேறே என்பதனைச் சாற்றுகின்றார். இதன் வழி அறிவு நிறைந்தவர்களுக்குப் பொறுமையும், வாலிபத்தினர்க்குப் போகமும், தாமரைத் தடாகத்திற்குப் படித்துறையும், ஒப்பனைக்கு நல்ல ஆடையும், புலமைக்குக் கல்விச் செல்வமும், நகரத்திற்கு நீர்வளமும் இன்றியமையாத செல்வங்கள். எனவே இச்செல்வங்கள் போன்று ஒருவற்கு மகப்பேறு சிறப்புடைய செல்வமாக உரைக்கப்பட்டது.

இவ்வாறான மக்கட் பேற்றின் சிறப்பினையே திருவள்ளுவரும்,

'மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்கலம் நன் மக்கட்பேறு'

'பெறுமவற்றுள் யாம் அறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறு அல்ல பிற'

என்னும் குறள்கள் மூலம் மக்கட் பேற்றின் சிறப்பினை மிக அழகாக எடுத்துக் கூறியுள்ளார். திருவள்ளுவர் இல்லறத்தின் சிறப்பு மக்கட் பேற்றின் மூலம் உயர்வடைவதனைக் காட்டியுள்ளமை நோக்கற்பாலது.

இந்த வகையில் சங்க இலக்கிய நூலான எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான குறுந்தொகையிலும் மக்கட் பேற்றின் சிறப்பை,

''மாலை முன்றில் குறுங் காற் கட்டில்'' என்ற பாடல் மூலம் அழகாக எடுத்து இயம்பப்படுகின்றமையும் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு கதையின் பொருளை விரித்துக் கூறும்போது, கவிஞன் வகுத்த வரையறைக்குள் அணுகியே எமது விளக்கம் அமையவேண்டும். கவிஞன் எடுத்துக் காட்டும் அணிகள் கருத்துக்களை விளக்கஞ் செய்வதற்கான கதைகள் முதலியவற்றையும் நாம் அறிந்திருத்தல் அவசியம்.

### பயிற்சி

1. தாயின் சிறப்பு
2. கல்வியின் முக்கியத்துவம் பற்றி விரித்தெழுதுங்கள்.

# உவமைத்தொடர்

நன்கு தெரிந்த ஒரு பொருளின் தன்மையை நினைவுறுத்தி, தெரியாத ஒரு பொருளின் தன்மையை அறிவுறுத்தும் தொடர் உவமைத்தொடர் எனப்பெயர் பெறும். உவமை ஒப்பிட்டுக்கூறுகை. கருத்தைத் தெளிவாகவும் நிறைவாகவும் சுருக்கமாகவும் சுவையாகவும் வெளிப்படுத்துவதற்கு உவமைத் தொடர்கள் மிகப் பயன் உள்ளவை.

இத்தகைய முறை மிகப்பண்டைக் காலம்முதல் இருந்து வருகிறது என்பதற்குப் பண்டைய இலக்கண இலக்கிய நூல்கள் சான்றாக உள்ளன. இவ்வகை முறை, பேச்சு வழக்கிலும் உரைநடை, செய்யுள் ஆகிய எழுத்து வழக்குகளிலும் அதிகம் காணப்படுகிறது.

### உவமைச்சொற்றொடர்

அகலாது அணுகாது தீய்க்காய்வார் போல
அக்கினியிற் பட்ட மெழுகு போல
அங்கணத்துள் உக்க அமிழ்தம் போல
கோழி குப்பையைக் கிளறினால் ஆவது போல
அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
உட்சுவரிருக்கப் புறச்சுவர் கோலஞ் செய்வது போல்
உறியில் வெண்ணெய் இருக்க ஊரெல்லாம் நெய்க்கு
அலைதல் போல
ஏவற்பேய் கூரையைப் பிடுங்கியது போல
ஏழை சொல் அம்பலம் ஏறாமை போல
ஏறாமடைக்கு நீர்ப் பாய்ச்சினாற் போல
மீகாமன் இல்லாத மரக்கலம் போல
மொட்டைத் தலைச்சியைக் கூந்தலழகி என்றாற் போல
வளர்த்த கடா மார்பிற் பாய்ந்தாற் போல
வலையிற் சிக்கிய மான் போல

### பயிற்சி

1. உவமைத்தொடர்கள் விரவி வரப் பந்தி ஒன்று அமையுங்கள்.
2. பாடசாலையில் பயன்படுத்தக் கூடிய உவமைத்தொடர்கள் ஐந்தினைத் தெரிந்து வாக்கியம் அமையுங்கள்.
3. உங்களுக்குப் பிடித்த உவமைத்தொடர்களைக் கையாண்டு ‘ஹைக்கூ’ கவிதைகள் ஆக்குங்கள்.

### செயற்பாடு

1. இவைபோன்ற வேறு உவமைத்தொடர்களைச் சேகரித்து. அவற்றினைப் பொருள் அடிப்படையில் ஒற்றுமைப்படுத்தி எழுதுங்கள்.
2. உங்கள் பிரதேசத்தில் பேச்சு வழக்கில் அதிகம் பயன்படுத்தப்படும் உவமைத் தொடர்களைத் தொகுத்து அவற்றை வாக்கியங்களாக எழுதுங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

இலக்கணம்

# பதம்

பதம் என்பது சொல் எனப்படும்.

பின்வருவனவற்றை அவதானிப்போம்.

| | | |
|---|---|---|
| ஆ | நிழல் | குவலயம் |
| மா | மரம் | நடந்தான் |
| ஈ | ஆலயம் | ஆடு |
| மாடு | பாடினான் | |

இச்சொற்களின் பண்புகளை இனம் காண்போம்.

| | | |
|---|---|---|
| ஓர் எழுத்து ஒரு சொல் | - | ஆ, மா, ஈ. |
| ஈர் எழுத்துக்கள் ஒரு சொல் | - | ஆடு, மாடு |
| மூவெழுத்துக்கள் ஒரு சொல் | - | நிழல், மரம் |
| நான்கு எழுத்துக்கள் ஒரு சொல் | - | ஆலயம், பாடினான் |
| ஐந்து எழுத்துக்கள் ஒரு சொல் | - | குவலயம், நடந்தான் |
| ஆறு எழுத்துக்கள் ஒரு சொல் | - | அம்பலவன், நடந்தனன் |
| ஏழு எழுத்துக்கள் ஒரு சொல் | - | அரங்கத்தான், அருமையானவன் |
| எட்டு எழுத்துக்கள் ஒரு சொல் | - | சக்கரவர்த்தி, உலகளந்தவன் |
| ஒன்பது எழுத்துக்கள் ஒரு சொல் | - | உருவமில்லாதவன், அருவுருவாகியவன் |

இங்கு, ஓர் எழுத்து ஒரு சொல்லாகியுள்ளது. ஒன்றுக்குமேற்பட்ட எழுத்துக்கள் இணைந்தும் சொல்லாகி உள்ளது.

எனவே,

ஒன்றோ, ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்களோ இணைந்து பொருள் தருமானால் அதனைச் சொல் அல்லது பதம் எனலாம்.

பின்வரும் சொற்களை அவதானிப்போம்

நாடுகள், புதிர்கள், அறிவு, கல்வி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாடு | + | கள் | - | நாடுகள் |
| புதிர் | + | கள் | - | புதிர்கள் |

இங்கு சொற்கள் பிரிந்து பொருள் தருவதை அவதானித்தீர்கள். நாடு, புதிர் என்பன பெயர்ச்சொற்களாகவும் 'கள்' என்பது பன்மை உணர்த்தும் உறுப்பாகவும் நின்று பொருள் தருகின்றன.

இதனைப் போல அறிவு, கல்வி என்பனவற்றைப் பிரிக்கமுடியாது என்பதையும் அவதானித்திருப்பீர்கள்

அறி + வு - கல் + வி என்ற சொற்களில் அறி, கல் என்பன வினைச்சொல்லாக நின்று பொருள் தருகின்றன. எனினும் வு, வி பொருளை உணர்த்துவனவாக இல்லை.

ஆகவே,

சில சொற்களைப் பொருள் தரும் வகையில் பிரிக்க முடியும் சில சொற்களைப் பொருள் தரும் வகையில் பிரிக்க முடியாது என்பதை அவதானித்திருப்பீர்கள்.

எனவே,

சொற்களைப் பொருள் தரும் வகையில் பிரிக்க முடியுமானால் அவற்றைப் 'பகுபதம்' என்பர்.

சொற்களைப் பொருள் தரும் வகையில் பிரிக்க முடியாவிட்டால் 'பகாப்பதம்' என்பர்.

இவ்வடிப்படையில் சொற்களை பகுபதம், பகாப்பதம் என இரண்டாக வகைப்படுத்தலாம்.

பயிற்சி

பின்வரும் சொற்களைப் பொருள் தரும் வகையில் பிரித்தெழுதுங்கள். பிரிக்க முடியாத சொற்களைப் பகாப்பதம் எனக் குறிப்பிடுங்கள். கல், மரங்கள், பாதைகள், மலர்கள், அறி, மதி, புத்திசாலி, அடிமை, வாணிகம், மாணவிகள், பள்ளிகள், முயற்சி

செயற்பாடு

சங்க இலக்கியங்கள் என்ற பாடப்பரப்பில் இடம்பெற்ற பகுபதங்களையும், பகாப்பதங்களையும் தெரிந்து எழுதுங்கள்.

## பகாப்பதம்

பின்வரும் சொற்களை அவதானிப்போம்.

நீர், நிலம், காற்று, வா,

நட, இரு, உறு, தவ, ஆகவே

இச்சொற்களைப் பிரிக்க முடியாது. பிரித்தால் பொருள் தராது. இவ்வாறு பிரிக்க முடியாத சொற்களை 'பகாப்பதம்' என்பர்.

ஆகவே,

பகாப்பதம் என்பது பகுக்கமுடியாத பதம் ஆகும்.

கூன், அறி, புத்தி, கெட்டி, நட, பால், கல், கடு

என்பன போன்றவை பகாப்பதம் என்பதை அறிவோம். இவை சொல்லாக்கத்தின் பொழுது அடிச்சொற்களாக அல்லது வேர்ச்சொற்களாக அமையும்.

செயற்பாடு

படி, என்ற பகாப்பதத்தை அடிச்சொல்லாக கொண்டு பல்வேறு சொற்களை ஆக்குங்கள்.


இலவசப் பாடநூல் விநியோகத்திற்காக

பகாப்பதங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்

| | | |
|---|---|---|
| பெயரப் பகாப்பதம் | - | நீ, மண், வளி, மரம், பூ |
| வினைப்பகாப்பதம் | - | நில், ஒடு, செல், உண், பாடு |
| இடைப்பகாப்பதம் | - | ஐ, ஆல், மற்று, சொல் |
| உரிப்பகாப்பதம் | - | சால, தவ, உறு, நனி, கழி, கூர் |

## பயிற்சி

1. பின்வரும் சொற்களுள் பகாப்பதங்களையும் பகுபதங்களையும் வேறுபடுத்துங்கள்.

   வா, வாடகை, வருகை, வாழ்வு, மணம், வயிறு, மருந்து, விருந்து, நடந்து, பணம், மரம், மரத்தில், திங்கள், நாங்கள்

2. பின்வரும் பதங்களை பெயர்,வினை, இடை, உரிப்பகாப்பதங்களாக அட்டவணைப்படுத்துங்கள்.

   அடி, மன், மலர், அன்பு, உறு, படி, மற்று, வேறு, கழி, இடும்பை

## செயற்பாடு

பகாப்பதங்களை பெயர், வினை, இடை, உரி என வகைப்படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.